வட இலங்கையின்
ஒரே ஒரு விளம்பர
முகவர்கள்
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
அன்ட் அட்வடைசிங்சிஸ்டம்ஸ்
மே/பா. யாழ் பீச் இன்ஸ்
139, கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்.
புதுமையின் உறைவிடம் செனித்

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

வட இலங்கையில்
ஒரே ஒரு விளம்பர
முகவர்கள்
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
மே/பா. யாழ் பீச் இன்ஸ்
139. கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்.
புதுமையின் உறைவிடம் செனித்.

மலர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ௵ ஆவணி ௴ 20 உ. வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்ஹஜ் பிறை 29 (05-09-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்- 248

கிழக்கில் விமானங்கள் மீது போராளிகள் தாக்குதல்!

ஒன்று சேதமடைந்தது

அடுத்தது தரையிறங்க முடியாது கொழும்புக்குத் திரும்பிச் சென்றது

— மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் —

மட்டக்களப்பு, செப்டம்பர் 5

அரசாங்க படைகளுக்குச் சொந்தமான இரண்டு விமானங்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் நேற்றுத் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதல்களின் விளைவாக ஒரு விமானத்தின் இறகுப் பகுதி முற்றாகச் சேதமாகியது. மற்றைய விமானம் பல தடவைகள் தரை இறங்க முயற்சித்தும் அதில் தோல்வி கண்டு திரும்பிச் சென்றது. இரண்டு தாக்குதல்களும் நான்கு மணி நேர இடைவெளியில் நடந்தது.)

விமானங்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து படையினர் ஷெல் தாக்குதலும் ஹெலி மூலம் துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தினர்.

விமானங்கள் மீதான தாக்குதல்களை தாமே நடத்தியதாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தனர்.

தாம் தாக்கிய விமானங்களில் ஒன்று "உருமறைப்பு விமானம்" என்றும் புலிகள் அந்த அறிக்கையில் தெரிவித்தனர்

இச்சம்பவம் பற்றிய விவரமாவது:-

வியாழன் தோறும் கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு விமானம் மூலம் படையினர் வருவதும் கொழும்புக்குத் திரும்பப் போவதும் வழக்கம்.

அதன்படி நேற்றுக் (4ஆம் பக்கம் பார்க்க)

மன்னார் முகாம்களை விட்டு

வெளியேறும் முயற்சி முறியடிப்பு

புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், செப் 5

மன்னார், கோட்டை, தள்ளாடி, தம்மன்னார் முகாம்களிலிருந்து நேற்று ஒரே சமயத்தில் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

விமானப்படைத் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மேற்படி நான்கு முகாம்களில் இருந்தும் வெளியே வருவதற்குப் படையினர் எடுத்த முயற்சிகளைத் தாம் தொடர்ந்து முறியடித்து வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

இராணுவத்தினரின் மோட்டார் ஷெல் தாக்குதலில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த காவி (ஜோன்சன்) வீரமரணம் அடைந்ததாகவும் புலிகள் இயக்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

கொழும்பு பேச்சு விவரம்:

கூட்டணியின்

பரிசீலனைக்கு அறிக்கை

இலங்கை அரசு அனுப்பும்

கொழும்பு, செப். 5

கொழும்பில் இடம் பெற்ற அரசு - கூட்டணி பேச்சுக்களின் போது ஏற்பட்ட முன்னேற்றங்கள், முரண்பாடுகள் குறித்த முழு அறிக்கை ஒன்றை இலங்கை அரசு, தமிழர் விடுதலைக் கூட்டணியின் பரிசீலனைக்கு இன்று அல்லது நாளை அனுப்பி வைக்கும் என்று தெரிகிறது.

கொழும்பில் உள்ள கூட்டணிப் பிரமுகர் ஒருவர் மூலம் இந்த அறிக்கை அனுப்பப்படும்.

வடக்கு — கிழக்கு மாகாண இணைப்பு, இரண்டு மாகாணங்களில் உள்ள தமிழ்ப் பகுதிகளை தனி மாகாணமாக மாற்ற எல்லை நிர்ணயக் கமிஷன் ஒன்றை நியமிப்பது பற்றிய விவரங்களும் இந்த அறிக்கையில் இருக்கும் என்று தெரிகிறது. (இ-எ)

கடையடைப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 5

இன்று நடைபெற இருந்த காலவரையற்ற கடையடைப்பு லொறிப் போக்குவரத்துச் சேவை நிறுத்தம் விடுதலை அமைப்புக்களின் வேண்டுகோளுக்கு இணங்க இம் மாதம் 11 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலை அமைப்புக்கள் சம்பந்தப் பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு பேசி முடிவு எடுக்க இம் மாதம் 9ஆம் திகதி வரை அவகாசம் கோரியிருப்பதாக யாழ் வர்த்தகர் சங்கம், யாழ் மினிபஸ் போக்குவரத்து ஒன்றியம், வடபிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்கம் ஆகியவற்றின் கூட்டுக்குழு விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குறிக்கப்பட்ட திகதிக்குள் முடிவு கிடைக்காத பட்சத்தில் இம் மாதம் 11ஆம் திகதியில் இருந்து காலவரையற்ற கடையடைப்பு, லொறிப்போக்குவரத்துச் சேவை நிறுத்தம் ஆகியன இடம் பெறும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

38 பவுண் தங்க நகை இரும்புத்துண்டுகளாக மாறிய மர்மம்!

பண்டத்தரிப்பு, செப் 5

38 தங்கப்பவுண் நகைகள் இரும்புத் துண்டுகளாக மாறிய மர்மம் பெரியவிளான் இணக்கசபை விசாரணையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை துவங்கியது.

சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:-

போலியோ நோயால் அழகிழந்த காலை குணப்படுத்துவதாகக் கூறி வீட்டாரின் தங்கநகைகளை சுழற்றச் செய்தார் மாந்திரீகர் ஒருவர்

நடு வீட்டினுள் கும்பம் வைத்துப் பூசைக்கு நகைகளும் வைக்கப்பட்டன

கால் அழகானதாக மாறி சீராக நடப்பதற்கு ஒருவருடம் செல்லும் அதுவரை வீட்டில் (4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ் மத்திய கல்லூரி வேம்படி திட்டமிட்டபடி திங்கள் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், செப்.5

யாழ் - மத்திய கல்லூரி, யாழ் வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவை திட்டமிட்டபடி 8 ஆம் திகதி திங்கட்கிழமை மூன்றாம் தவணைக்காக ஆரம்பிக்கப்படும்.

இது தொடர்பாக நேற்று இரண்டு பாடசாலைகளிலும் தனித் தனியே கூட்டங்கள் நடத்தப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மாணவத் தலைவர்கள், நலன்விரும்பிகள், பிரஜைகள் குழு உறுப்பினர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

* திங்கட்கிழமை ஆரம்பமாகும் இக் கல்லூரிகளுக்கு ஆசிரியர் குழு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மாணவர் தலைவர்கள் பெற்றோர்கள் பூரண ஆதரவு அளிக்கவேண்டும்.

பெற்றோர்கள் சகலரையும் அழைத்து அவர் 4 ஆம் பக்கம் பார்க்க)

400 பேரில் நால்வர்மட்டும் தடுத்து வைப்பு

மட்டக்களப்பு, செப் 5

மட்டக்களப்புப் பகுதியில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட சுமார் 400 பேரில் 4 பேரைத்தவிர ஏனையோர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இதனிடையில் மூன்று தமிழ் இளைஞர்கள் ஆயுதப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். (இ-எ-21)

மாதகல் கடற்பகுதியில் படகு மீது தாக்குதல்

7 பேர் பலியானதாக அச்சம்

யாழ்ப்பாணம், செப்.5

தமிழ் நாட்டில் இருந்து வந்ததாகக் கருதப்படும் படகு ஒன்றின் மீது கடற்படையினர் சுட்டதில் படகு கடலில் மூழ்கியதாக அறியவந்தது

மாதகல் கடற்பகுதியில் வைத்துக் கடற்படையினர் படகு மீது தாக்குதல் நடத்தினர்.

படகு கடலில் மூழ்கியதால் அதில் வந்த ஏழு பேருக்கு என்ன நடந்தது என்பது குறித்துச் சரியாகத் தெரியவில்லை.

இந்தப் படகு கடத்தல் பொருள்களுடன் வந்தது என்றும் அதில் வெளிநாட்டு பத்திரிகையாளர் ஒருவர் வந்தார் என்றும் சொல்லப்பட்டது.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர் உயிராபத்து இன்றி நீந்தி அக்கரை சேர்ந்ததாக முன்னர் கிடைத்த ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவித்தன.

எனினும் படகில் வந்த ஏழு பேரும் இறந்து விட்டதாகவும் அவர்களில் ஒருவர் வெளிநாட்டுக்காரர் என்றும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதலுக்கு இலக்கான படகில் இருந்த வெளி நாட்டுப் பாஸ்போர்ட் ஒன்றும், வாணவேடிக்கைக்குப் பயன்படுத்தப்படும் மருந்துப் பொருள்களும், சில துண்டுப் பிரசுரங்களும் கண்டு பிடிக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதனிடையில் கொழும்பில் இருந்து கிடைத்த தகவலின் படி,

ஹொங்கொங்கில் இருந்து கொழும்பு வந்த கனடா பிரஜை ஒருவரை பதினைந்து தினங்களுக்கு மேலாகக் காணவில்லை என்று தெரியவந்துள்ளது. (உ-எ)

போராளி அமைப்புகள் இரகசிய பேச்சு

சென்னை, செப் 4

அரசு-கூட்டணிப் பேச்சுக்களின் பெறுபேறுகள் குறித்து சென்னையில் தமிழ்ப் போராளிகள் அமைப்புக்கள் தங்களுக்குள் இரகசியப் பேச்சுக்களை நடத்தி வருகின்றன.

டில்லிக்குச் செல்வதற்கு முன்பாக இந்த ஆலோசனைகள் இடம் பெற்று வருகின்றன என்று சொல்லப்படுகிறது. (இ-எ)

முச்சந்தி முனி

மட்டக்களப்பிலே உவை இராணுவத்தார் கொஞ்சம் தாராளமாய் நடக்கினம் போலை. 400 பேரைப் பிடிச்சு 4 பேரைத்தானே வைச்சிருக்கினம். அடுத்த பக்கமாய்ச் செய்யிறது தானே அவையின்ர வழமையான நடைமுறை! ..

அரசு-கூட்டணி

பேச்சு பெறுபேறுகளை இந்தியா நுணுக்கமாக ஆராய்வு

கொழும்பு, செப் 5

இனப்பிரச்சினை தொடர்பாக லங்கை அரசுக்கும் கூட்டணித் தலைவர்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகளை மிக நுணுக்கமாகவும் அவதானமாகவும் பரிசீலனை செய்தபின்பு தான் போராளிகளை பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுமாறு கேட்பதா? இல்லையா? என்பது குறித்து இந்தியா முடிவு செய்யும்.

மேற்படி தகவலை விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டணித் தலைவர்கள் உடன்பாடு காணப்பட்ட விடயங்கள் உடன்பாடு காணப்படாத விடயங்களிலுள்ள சிக்கல்கள் ஆகியவை பற்றி இந்திய அரசின் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்து வருகிறார்கள். (உ-21)

இலங்கைக்கு புதிய அரசமைப்பு

மகாநாயக்கரின் விருப்பம்

கொழும்பு, செப் 5

இலங்கைக்கு புதிய அரசமைப்புச் சட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் என்று ரமண்ய நிக்காய மகாநாயக்க தேரராக நியமனம் பெற்ற வண பஞ்சசார தேரர் கேட்டிருக்கின்றார்.

நாட்டில் தற்சமயம் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல இலங்கையின் பெரும் பகுதியைக் கைப்பற்றி தென் இந்தியாவில் உள்ள தமிழ் நாட்டுடன் இணைத்த அகண்ட தமிழ் ராஜ்ஜியம் ஒன்றை நிறுவுவதே தமிழரின் இலட்சியம்.

வடக்கில் புத்தளம் மாவட்டம் தொடக்கம் கிழக்கில் தென் மாகாண எல்லை வரை பிடிப்பதே தமிழரின் போராட்டம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமிழருக்குக் கொடுப்பதன் மூலம் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. இது நிலைமையை இன்னும் மோசமாக்கும்.

புதிய மகாநாயக்க தேரர் கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்த போது மேற்சொன்ன தகவல்களை வெளியிட்டார். (உ-எ)

பிரதமருக்கு அபராதம்

போர்ட் லூயி, செ.4

மொரிஷியஸ் நாட்டுப் பிரதமர் அன்ரூட் ஜுக்நோத்துக்கு 5000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

முன்னாள் நீதிவானும் அரசியல்வாதியுமான ஹரிசந்த பகிருட்டி என்பவர் பற்றி அவதூறான தகவல்களை பொதுக் கூட்டம் ஒன்றில் வெளியிட்டதற்காகவே மொரிஷியஸ் நீதிமன்றம் இந்த அபராதத்தை விதித்தது.

தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார். (உ-எ)

சயனைட் அருந்தி தற்கொலை

மட்டக்களப்பு, செப்.5

மட்டக்களப்பு இருதயபுரத்தை கடந்த புதன்று படையினர் முற்றுகையிட்டு தேடுதல் நடத்தியபோது போராளி ஒருவர் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

பாதுகாப்புப் படையினரிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்பதற்காகத் தற்கொலை செய்து கொண்ட இந்தப் போராளி விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நீசன் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவருக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் வீரவணக்கத்தைத் தெரிவித்திருக்கிறது. (உ)

தனிநாடு தவிர்ந்த வேறுவழியை

இந்தியா காட்டினால் மக்களிடம் சமர்ப்பிப்போம்

மாகாணசபை வெறும் சில்லறை --பிரபா

லண்டன், செப். 5

இலங்கையின் இனவெறி நடவடிக்கையிலிருந்து எம்மைப் பாதுகாப்பதற்கு எமது பாரம்பரிய மண்ணில் தனிநாடு ஒன்றை அமைப்பதே எமக்குத் தெரிந்த ஒரேவழி.

இது தவிர்ந்த வேறு வழி ஒன்றை இலங்கை அரசோ இந்தியாவோ காட்டினால் அதனை எமது மக்கள் முன் சமர்ப்பிக்க நாம் தயார்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே பிரபாகரன் தெரிவித்தார்.

இந்திய பத்திரிகை ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே இப்படித் தெரிவித்ததாக பி பி ஸி புதன்று அறிவித்தது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் மாகாணசபைத் திட்டம் வெறும் சில்லறை விடயம்.

தமிழ் பிரிவினை வாதத்தை ஏமாற்றும் விதமாகவே அது ஜெயவர்த்தனாவின் மாகாணசபைத் திட்டத்திற்கு சிங்கள தீவிரவாதிகள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்.

தமிழர்களுக்கு ஆதரவான விஜேகுமாரணதுங்க போன்ற சிங்கள இடது சாரியினருக்கே அவர்கள் குண்டுவீசி எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இலங்கை அரசியலில் சமாதானம், தீர்வு உடன்படிக்கை என்று ஒன்று உருவாகும் போது எல்லாம் இனக்கலவரம் ஏற்பட்டதை வரலாறு எமக்குக் காட்டியிருக்கிறது.

—இப்படி பிரபாகரன் மேலும் தெரிவித்தார். (உ)

சுபநேரம்

5—09—1986
வெள்ளிக்கிழமை
சுபநேரம்
6.04 முதல் 7.34 வரை
ராகுகாலம்
10.34 முதல் 12 04வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
மறைஞானசம்பந்தர் குருபூஜை

ராஜீவிடம் இப்படி கேட்டாராம் பிரேமதாச

லண்டன், செப். 5

யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள், தாக்குதல்கள் உடன் நிறுத்தப்படும்படி இந்திய அரசு புலிகளுக்கு காலங்குறித்து இறுதி எச்சரிக்கை (ULTIMATUM) விடுக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கைப் பிரதமர் பிரேமதாச ஹராரேயில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்தபோது வேண்டுகோள் விடுத்தார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றை மேற்கோள் காட்டி பி. பி ஸி. தனது செய்தி அறிக்கையில் இப்படித் தெரிவித்தது. (உ)

இளைய தலைமுறையினரின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சுன்னாகம் கூட்டுறவு சங்கத்திற்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், செப் 5

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் யாழ் மாவட்டத்திலேயே முதன்மையான சங்கமாக திகழ்கின்றது.

இவ்வாறு தேசிய கூட்டுறவு சபையின் தலைவர் திரு. சி. சிவமகாராசா சுன்னாகம் கட்டுவன் தெற்கில் புதிதாக கிளையொன்றை ஆரம்பித்துச் சிறப்புரை ஆற்றுகையில் தெரிவித்தார்

திரு ச. குருகேசன் மங்கல விளக்கு ஏற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். திரு சி. குமாரவேல் தலைமை வகித்தார்.

உடுவில் உதவி அரச அதிபர் திரு ஆ. மாசிலிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

கிளைக்குழுத் தலைவர் திரு. க. செல்லப்பா உரையாற்றுகையில்:-

தற்காலிகமாக அமைத்துள்ள இக்கிளை விரைவிலேயே சொந்தக் காணியொன்றில் புதிய கட்டடத்தில் நிரந்தரமாகப் பணிபுரிய ஆரம்பிக்கும் இதற்கென இரண்டு லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது என்றார்

கிளைக்குழு செயலாளர் திரு. த. நந்தகுமாரன் (சுட்டா) நன்றியுரை ஆற்றினார். (உ-9)

தொழிற் பயிற்சிகள்

விவசாயம், வெல்டிங் தொழிற் பயிற்சி. இடம் Y T C., பரந்தன். விபரங்களுக்கு 'சஞ்சீவி' ஆகஸ்ட் 30 பார்க்கவும்

A|L 87
தூய பிரயோக
கணிதம்
பகல் நேர வகுப்பு
ஆரம்பம்; 5-9-86
10—30: காவிகள்
11—45: அட்சர கணிதம்
ஆசிரியர்:
ரவிமோகன்
யாழ்ப்பாணம்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

வடபகுதி நிர்வாகம்: அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 5

வடபகுதியின் இராணுவ இணைப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சிவில் அதிகாரங்களை அரச அதிபரிடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதியை கேட்பது என பிரஜைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக்குழு தீர்மானித்துள்ளது.

ஒன்றிணைப்புக் குழு கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது

கூட்டத்தில் மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன:-

✶ ஜூலை 2 ஆம் திகதி முதல் இராணுவ இணைப்பதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட சிவில் அதிகாரங்களை அரச அதிபரிடம் ஒப்படைக்கவேண்டும்.

✶ வெளிநாட்டு நிறுவனங்களிடம் உதவி பெற்று தமிழ் அகதிகளுக்கு உதவும் தனியார், பொது ஸ்தாபனங்கள் யாவும் ஒரு தலைமையின் கீழ் செயற்பட வேண்டும்.

✶ வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு ஜனாதிபதியை கேட்டுக்கொள்வது

மேற்படி தீர்மானங்கள் யாவும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டம் பிரஜைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழு புதிய தலைவர் திரு எஸ் ஏ அருளானந்தம் தலைமையில் நடைபெற்றது. (இ-5)

விசேஷ சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப் 5

இஸ்லாமிய புதுவருடத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் ஜமாஅதே இஸ்லாமிய பயிற்சி மன்றம் இன்று விசேஷ சொற்பொழிவு நிகழ்ச்சி ஒன்றை நடத்துகின்றது

இன்று வெள்ளி இரவு இஷாத் தொழுகையைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் புதிய சோனகதெரு அபூபக்கர் (ரலி) பள்ளிவாசலில் இந் நிகழ்ச்சி இடம்பெறும். (இ-ஈ)

வவுனியா அகதிகள் சொந்த இடங்களுக்கு திரும்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப் 5

கடந்த காலங்களில் வவுனியாவில் நடைபெற்ற கலவரங்களின் போது அகதிகளாக்கப்பட்ட தமிழ் குடும்பங்கள் தற்பொழுது சொந்த இடங்களுக்கு திரும்ப ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் செட்டிகுளம், புளியங்குளம் போன்ற அகதி முகாம்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் தஞ்சமடைந்திருந்தனர்.

இவர்களை சொந்த இடங்களுக்குத் திரும்ப ஏற்பாடு செய்ய பட்டு வருகிறது (இ-10)

வேலணையில் கல்விப் பொருட்காட்சி

வேலணை, செப் 5

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் கல்விப் பொருட்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிதொடக்கம் மாலை 4.00 மணி வரை பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இப் பொருட்காட்சிக்குப் பிரதம விருந்தினராக வேலணை வட்டாரக்கல்வி அதிகாரி பண்டிதர் பொன் கணேசனும் சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக புவியியற் பீடத்தின் தலைவர் திரு. செ. பாலச்சந்திரனும் கலந்து கொள்கிறார்கள். (இ-167)

அருகருகே நின்று

படம் பிடித்துக்கொண்ட சிப்பாயும் போராளியும்

ஊர்காவற்றுறை, செப். 5

போராளி ஒருவரும், சிப்பாய் ஒருவரும் அருகருகே நின்று படம் எடுத்துக் கொண்டனர். இதைப்பார்த்த பொதுமக்கள் ஆரவாரித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இச்சம்பவம் நடந்த சனிக்கிழமை சுருவில் இடம்பெற்றது

அன்றையதினம் அங்கு நடைபெற்ற விளையாட்டுப்போட்டி ஒன்றிலேயே இந்நிகழ்ச்சி இடம்பெற்றது.

சுருவில் பாலர் பாடசாலையில் சிறுர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் வினோத உடைப் போட்டியும் இடம்பெற்றது அதில் கெரில்லாப் போராளியாக சிறுவன் ஒருவனும் இராணுவ சிப்பாயாக இன்னொரு சிறுவனும் வேடமணிந்து கைகளில் விளையாட்டுத் துப்பாக்கிகளோடு காணப்பட்டனர்.

அவர்கள் மைதானத்திற்கு வரும்போதே துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் ஒலிபெருக்கியில் ஒலிபரப்பாயின (உ-16)

வடமாகாணத்தில் வேலையற்ற

பட்டதாரிகள் சங்கம் அரசிற்கு மகஜர்

யாழ்ப்பாணம், செப் 5

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் ஆசிரிய நியமனங்களின் போது தமக்கு இடமளிப்பது குறித்து உடன் தீர்வு காணுமாறு கோரி மகஜர்களை அரசுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இச்சங்கத்தில் இலங்கை இந்திய பல்கலைக்கழகங்களில் சங்கீதம், விஞ்ஞானம், கலை, வர்த்தக துறைகளில் பட்டம் பெற்ற வேலையற்ற பட்டதாரிகள் அங்கத்தினராக இருக்கின்றனர் என அதன் தலைவர் திரு. வி. ஏ. சிவராசா தெரிவித்தார்.

ஜனாதிபதி, அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு த. மகாசிகம், வடமாநில கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம், கல்வியமைச்சர், இளைஞர் வேலை வாய்ப்புத் திட்டமிடல் பணிப்பாளர், கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் கலாநிதி ஆ. கந்தையா ஆகியோருக்கு இம்மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் பகுதியில் நிலவும் ஆசிரியர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய தங்களை பயன்படுத்துமாறு இவர்கள் கேட்டுள்ளனர். (உ-5)

வட்டுக்கோட்டை வட்டார கல்வி பொருட்காட்சி

வட்டுக்கோட்டை, செப் 5

வட்டுக்கோட்டை கல்வி வட்டாரப் பாடசாலைகளின் கல்விப் பொருட்காட்சி இம்மாதம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இக்கல்விப் பொருட்காட்சி 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாடசாலை மாணவர்களுக்கும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பெற்றோர்களுக்கும் காண்பிக்கப்படும்

ஆரம்ப பாடசாலைகளின் பொருட்காட்சி பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலும் சிரேஷ்ட பாடசாலைகளின் பொருட்காட்சி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் நடைபெறும். (இ-161)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

எதிர்காலத்தில் கூட்டணியினர் முஸ்லிம்களை பாதுகாப்பார்களா?

அதற்கு என்ன உத்தரவாதம் என்று கேள்வி

மட்டக்களப்பு, செப். 5

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது மட்டக்களப்பு தொகுதியில் இரு வேட்பாளர்களை நிறுத்தி முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை பறிக்க முயன்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எதிர்காலத்தில் முஸ்லிம்களைப் பாதுகாப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

மேற்கண்டவாறு ஏறாவூரில் இனப்பிரச்சினை தொடர்பாக ஆராயப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மட்டக்களப்பு 2 ஆவது எம் பி ஜனாப் அகமட் ரிஸ்வி சின்னலெவ்வை குறிப்பிட்டார்

வடக்கு — கிழக்கு இணைந்தால் என்ன? — இப்படிக் கருத்தரங்கில் கலந்து கொண்ட இளைஞர்கள் சிலர் கேள்வி எழுப்பினர் அதற்குப் பதிலளிக்கையில் தான் அவர் இப்படி குறிப்பிட்டார்

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் த. வி. கூ. நிறுத்திய இரு வேட்பாளர்களும் வெற்றி பெற்றிருந்தால் எமது பிரதிநிதித்துவம் இல்லாமல் போயிருக்கும்.

1970 பொதுத் தேர்தலில் எமது பிரதிநிதித்துவத்தை இழந்தமையினால் நமது சமூகத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவரும் அறிந்ததே

இனப் பிரச்சினைக்கு தீர்வு எதுவானாலும் அது முஸ்லிம்களின் ஒருமித்த கருத்தாகவே அமைய வேண்டும்

இப்படி அவர் கூறினார். (இ-21)

விசேட சேவை அலுவலர் மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்

யாழ் அரச அதிபர் கூறுகிறார்

வட்டுக்கோட்டை, செப் 5

விசேட சேவை அலுவலர்கள் இன்றைய சூழ்நிலையில் பொதுமக்களின் தேவைகளையும் குறைபாடுகளையும் நன்குக உணர்ந்து அவற்றை நிறைவேற்றுவதற்கு தம்மாலான முயற்சிகளைச் செய்ய முன்வரவேண்டும்

தமிழ் பேசும் விசேட சேவை அலுவலர் சங்க 4 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் யாழ் செல்ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு வி எம் பஞ்சலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத் தலைவர் திரு. வி. எஸ் துரைராசசா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திரு வி. எம். பஞ்சலிங்கம் தொடர்ந்து உரையாற்றும்போது, அரச உத்தியோகத்தர்கள் மக்களின் ஊழியர்கள் என்பதை நன்குணர்ந்துகொள்ள வேண்டும் மக்களின் தேவைகளையும் குறைகளையும் ஆராய்ந்து அறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் பணிபுரிய அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் முன்வரவேண்டும் என்றார்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை யாழ் மாவட்ட முகாமையாளர் திரு. த. முருகையா, யாழ் செயலக தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். கோபாலரத்தினம், யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு ரி.மாணிக்கவாசகர் ஆகியோர் உட்பட பலரும் உரையாற்றினர்.

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இலங்கைத் தேசிய [illegible] விதியில [illegible] வேண்டும்.

2. தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் வேண்டும்.

3. சுயபொருளாதார அமைப்பை வளர்க்க வேண்டும்.

4. மாவட்ட அபிவிருத்தி வேலைகளைத் தீவிரமாக கிராம மட்டத்தில் நடத்துவதற்கு அதிகாரிகளின் உதவியுடன் செயற்படுவது.

5. பத்துலட்சம் வீடமைப்புத் திட்டத்தில் கூடுதலானவர்களுக்கு உடன் வழங்குவதற்காக சட்டங்களை அறவிடுவதுடன் துரிதகதியில் வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவது-

தலைவராக திரு. வி. எஸ். துரைராசாவும் செயலாளராக திரு. வி. ரி. சுதிர்காமநாதனும் மீண்டும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (இ-161)

ஆசிரியர்களுக்கு திகதி மாற்றம்

யாழ்ப்பாணம், செப் 5

ஆசிரியர்களுக்கான தொலை ஆசிரியர் கல்விப் பாட நெறிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி பின்போடப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்பத்தவறிய ஆசிரியர்கள் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களை யாழ் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-5)

சைவமும் தமிழும் பிரிக்க முடியாதவை

தங்கம்மா அப்பாக்குட்டி உரை

சுன்னாகம், செப். 5

சைவமும் தமிழும் பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளன சுன்னாகம் இந்து இளைஞர் மன்றத்தினர் மிக உயர்ந்த நோக்குடன் அமைத்துள்ள அம்பேத்கார் சனசமூக நிலையம் சைவம் தழைக்கவும் தமிழ் வளரவும் பணிபுரியும்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுன்னாகம் அம்பேத்கார் சனசமூகநிலைய திறப்பு விழா சட்டத்தரணி பூ. சதாசிவரத்தினம் தலைமையில் நடைபெற்றது

சிவத்தமிழ்ச் செல்வி தொடர்ந்து பேசுகையில் இந்துசமய கலாசாரங்களை நாம் வளர்க்க பாடுபடுகிறோம் என்றும் [illegible] யோ அல்லது சமயத்தினரையோ நாம் எதிர்க்கவோ — நிந்திக்கவோ இல்லை என்பதையும் தெளிவு படுத்துகிறோம் என்றார்.

சட்டத்தரணி பூ. சதாசிவரத்தினம் தலைமையுரை நிகழ்த்தினார்.

நூல்நிலையத்தை திறந்து வைத்து பிரதம விருந்தினர் [illegible] வள்ளல் திரு க. கனகராசா உரையாற்றினார்

பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சி சிவலிங்கராசா, உடுவில் உதவி அரச அதிபர் திரு ஆ. மாசிலிங்கம், சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தலைவர் திரு சி. குமாரவேல், ஆசிரியர் திரு. கே, மார்க்கண்டன் திரு. எம், விஜயபவாஸ் மன், திரு, சபா, புஷ்பநாதன் உட்பட பலர் உரையாற்றினர்

திரு. செ. குலசிங்கம் நன்றியுரை கூறினார். (இ-27)

இசைப் பயிற்சிகள்

✶ மிருதங்கம் ✶ வயலின் ✶ கிற்றார்
★ எக்கோடியன் ✶ ஓகன் ✶ ஆர்மோனியம்
✶ பியானோ

போன்ற வாத்தியங்கள் வாசிப்பதற்கு பயிற்சியளிக்கப்படவுள்ளன. பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரசித்திபெற்ற இசைக் கலைஞர்களால் பயிற்றுவிக்கப்படும். ஆர்வமுள்ள இருபாலரும் விண்ணப்பிக்கலாம். விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் தபால் மூலம் / நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

பயிற்சிகள் 14-9-86இல் ஆரம்பமாகின்றன

உதவிப் பதிவாளர்,
பட்டப் படிப்புகள் கல்லூரி
(நுண்கலைப் பிரிவு)
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஓராண்டு நினைவு அஞ்சலி



அருணசலம் கிருஷ்ணபிள்ளை

பிரபல வர்த்தகர்
(கல்முனை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஸ்டோர்ஸ் உரிமையாளர்)

தோற்றம்; 01 - 12 - 1909
மறைவு; 17 - 08 - 1985
திதி: 05-09-1986

அன்பின் திருவுருவாய் குடும்பத்தின் ஒளிவிளக்காக எங்கள் இதய கோவிலில் இருக்கும் உங்கள் நினைவு ஓராண்டு கழிந்தாலும் ஒருகோடி பூசை மலர்கள் தினம், தினம் உங்கள் ஆத்மாவிற்கு அர்ச்சனையாகும்.

இங்ஙனம்,
மனைவி, பெருமகன், மருமகன், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

'பறுவதபவனம்',
அல்வாய் தெற்கு, அல்வாய்

2ஆவது பிறந்த தின வாழ்த்து

செல்வி தேவலியோமி

ஏழாலை வடக்கைச் சேர்ந்த தேவச்சந்திரன் — மணி தம்பதிகளின் செல்வப் புதல்வி தேவலியோமி தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று வெள்ளிக்கிழமை (05-09-86) டென்மார்க்கில் கொண்டாடுகின்றார். செல்வி லியோமியை அப்பா, அம்மா ஏழாலையில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, பாட்டி, அம்மப்பா அம்மம்மா, அளவெட்டியில் இருக்கும் மாமா, மாமி, சாம், ஜேர்மெனியில் இருக்கும் பெரியப்பா, பெரியம்மா, நிரோமி, தாரகன் சித்தப்பா, சவூதியரேபியாவில் இருக்கும் அற்புத மாமா குடும்பத்தினர், ஏழாலையில் இருக்கும் பேபிமாமா குடும்பத்தினர். டென்மார்க்கில் இருக்கும் பெரியப்பா, பெரியம்மா, மதுரா, ரேய் சித்தப்பா, றஜனு சித்தா, பிரான்சில் இருக்கும் நோனு சித்தா, ஏழாலையில் இருக்கும் ரோசா சித்தா, றுேனா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் சீரும் சிறப்புடன் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

உதய சங்கற்பம்

செல்வம், கல்வி முதலியவற்றிலே செருக்கடைந்து, முன் உங்களோடு பயின்ற சிநேகிதரை மறந்து விடாதே.

— நாவலர்

உதயன்
உண்மை - [illegible] - [illegible]
இல 15 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 24805
22073
05-09-86
த.பெ.23

ஓ, யாழ்ப்பாணமே!

தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு யாழ்ப்பாணம் இப்போது ஒரு கனவுச் சொர்க்கம்.

அந்தப் பகுதி அரசியல்வாதிகள் தமது எதிரணியினருக்கு விடும் சவால்கள் யாவும் "எங்கே யாழ்ப்பாணம் போய் வரட்டும் பார்ப்போம்" என்பதாகவே உள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பார்த்து விஜயகுமாரணதுங்காவும், அரசாங்கத் தரப்பினரைப் பார்த்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்காரரும் "எங்கே அவர்கள் யாழ்ப்பாணம் போய் வரட்டும் பார்க்கலாம்" என்று சவால்கள் விடுகிறார்கள்.

சவால்களுக்குப் புறம்பாக கடந்த வாரம் ஜனாதிபதி புதுவித அறிவித்தல் ஒன்றைச் செய்தார்

இந்த வருடத்திற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாவிடின் யுத்தம் நிச்சயம் அப்போது படையினரை மட்டும் சாகவிடாது நானும் யுத்தத்துக்குச் சென்று சாகவேண்டும் அப்போது மகாசங்கத்தையும், திருமதி பண்டாரநாயக்காவையும் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்வேன்— இதுவே ஜனாதிபதியின் அறிவிப்பு

அந்த அறிவிப்பைத் தொடர்ந்து; முதலில் ஜனாதிபதியை யாழ்ப்பாணம் போய் திரும்பி வருமாறும், அதன் பின்னர் தம்மைக் கூட்டிச் செல்வது குறித்து யோசிக்கலாம் என்றும் திருமதி பண்டாரநாயக்கா பதில் அளித்திருக்கிறார்.

திரு ஜே ஆர் ஜெயவர்த்தனா யாழ்ப்பாணத்தைப் பார்க்காதவர் அல்லர் திருமதி பண்டாரநாயக்காவும் பார்க்காதவர் அல்லர் தென்னிலங்கையின் தற்போதைய இரண்டு மிகப்பெரும் அரசியல் தலைவர்களான — புள்ளிகளான இருவரும் ஆட்சி பீடத்தில் இருந்த பொழுதில் மட்டுமன்றி, எதிர்க்கட்சிகளில் இருந்த போதும் யாழ்ப்பாணத்தை தரிசித்தவர்களே. வெவ்வேறு காலங்களில் யாழ்ப்பாணத்தில் மாலை மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டவர்கள். யாழ்ப்பாண மக்களின் ஏதோ ஒரு சாராரின் அபிமானத்துக்கும், நம்பிக்கைக்கும் உரியவர்களாக இருந்தவர்கள்.

ஆனால் இப்போது அவர்கள் யாழ்ப்பாணம் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்க்க வேண்டியதாகிவிட்டது! தமது அரசியல் வெற்றிக்குத் தமிழர்களைப் பகடைக்காய்களாக வைத்துச் சதுரங்கம் ஆடியதால் ஏற்பட்ட பெறுபேற்றினை அனுபவிக்கிறார்கள்!

யாழ்ப்பாண மண் அவர்கள் இங்கு வந்து சென்றபோது இருந்த மாதிரி இல்லை. இப்போது மாறிவிட்டது. சிவந்த மண் ஆகிவிட்டது 1983 ஜூலைக்குப் பின்னர் இராணுவ அட்டூழியங்களால் இறந்த அப்பாவித் தமிழ் மக்களின் இரத்தத்தினால் யாழ்ப்பாணத்து மண் சிவந்து விட்டது!

வரண்ட பூமியாக இருந்தாலும் வளப்பம் மிக்கப் பூமியாக இருந்த யாழ்ப்பாணம் இப்போது கல்வியில், கலாசாரத்தில், பொருளாதாரத்தில் மற்றெல்லாவிதத்திலும் பாலைவனமாகி வருகிறது.

யாழ்ப்பாண மண் சிவக்கவும், மக்கள் வாழ்வு பாலைவனமாகவும காரணகர்த்தாக்கள் யார்? அது எல்லோருக்கும் தெரிந்த பரகசியம் அல்லவா?

தொடக்கி வைத்தவர் சிறிமா தொடர்ந்து செய்பவர் ஜே. ஆர்.

இவர்களில் எவரும் இப்போதைக்கு யாழ்ப்பாணம் வரமுடியுமா, வரத்துணிவார்களா என்பது சந்தேகமே.

இடர் எது வரினும் யாழ்ப்பாணம் சென்றே ஆறுவேன் என்ற மன உறுதியுடன் அவர்கள் வந்தாலும் முந்திய யாழ்ப்பாணத்தைக் காண முடியாது.

வெயில் அடித்தாலும் வளம் குன்றாத சிறப்புடைய யாழ்ப்பாணப் பூமியை அவர்கள் பார்க்க இயலாது. மலர்ந்த முகங்களுடன் மலர் மாலை சூடி வரவேற்கும் தமிழ் மக்களைக் காணமுடியாது அவர்களின் விருந்தோம்பலை அனுபவிக்க முடியாது

எதனையும் செய்ய வழியில்லாதவர்களாய் வக்கில்லாதவர்களாய், மனமில்லாதவர்களாய் யாழ்ப்பாண மக்கள் மாற்றப்பட்டு விட்டார்கள். ஆனாலும், அவர்கள் இருவரும் இங்கு வரவேண்டும் என நாம் விரும்புகிறோம்

அவர்களின் அரசியல் ஆசை, அதனால் அவர்கள் இட்டகொடும் கட்டளைகள், அந்தக் கட்டளைகளால் தமிழ் மக்கள் உற்ற இன்னல்கள், அனுபவித்த கஷ்டங்கள், இழப்புகள், அனுபவிக்கும் மரணப் பொறி வாழ்க்கை என்பனவற்றை நேரில் பார்க்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்க வேண்டும்

அவர்களது கனவுச் சொர்க்கபுரியாக இருக்கும் யாழ்ப்பாணத்தின் உண்மை நிலையை அறியலாம்.

தமது கொடுமைகளின் விளைவைக் கண்டு கழிவிரக்கமாவது பிறக்கட்டும்.

ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவும், எதிரணித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் யாழ்ப்பாணம் வருவது குறித்து ஒருவருக்கொருவர் சவால் விடுவதை நிறுத்தி, இருவருமே இங்கு வந்து நிலைமையைப் பார்க்கட்டும்

விமானத்தில் அல்லது ஹெலிக்கொப்டரில் பறந்து பார்த்துப் பயனில்லை யாழ்ப்பாணத்தின் அழிவுகளை நேரில் பார்க்க வேண்டும். மக்களின் மரண அவலத்தை நேரில் கண்டறிய வேண்டும். அதற்காக வருவார்களா?

பீகாரில் வெள்ளம்

104 பேர் பலி

15 கிராமங்கள் நீரில்

பட்னா, செப் 4

வடக்கு பீகாரில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளத்தினால் 104 பேர் பலியாகியுள்ளனர்: 15 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன

மீட்புப் பணிகளுக்காக இராணுவப் படகுகள் உட்பட போதுமான எண்ணிக்கையிலான படகுகள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

வெள்ள நீரினால் துண்டிக்கப்பட்ட பகுதிகளில் உணவுப் பொட்டலங்களைப் போடும் பணியில் இராணுவஹெலிக்கொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன

வடக்கு பீகாரில் ரயில்வே தகவல் தொடர்புகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

பாசன அணைக்கட்டுகள் உடைக்கும் அபாய நிலையை நெருங்கிக் கொண்டிருப்பதால் சுமார் 50 கிராம மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளார்கள். (ஒ)

இராணுவ ஆட்சியை அங்கீகரித்தால் ஜனநாயகம்

டாக்கா, செப் 4

பங்களாதேஷ் மக்கள் தமது 53 மாத கால இராணுவ ஆட்சியை அங்கீகரித்த பின்னர் தான் நாட்டில் ஜனநாயகம் மீட்கப்படும்.

இவ்வாறு பங்களாதேஷ் ஜனாதிபதி ஜெனரல் ஏர்ஷாட் தெரிவித்தார்

அடுத்த மாதம் தாம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவது நிச்சயம் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்

ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஜாதியக் கட்சி சார்பில் ஏர்ஷாட் போட்டியிடுவார்

கண்ணியம், நேர்மை மற்றும் வளர்ச்சிக்குப் பயன்படும் அரசியலைக் கடைப்பிடிக்கப் போவதாக அவர் தெரிவித்தார் (ஒ)

வெளி உலகில்

டூனிஷியா சதிகாரருக்கு மரண தண்டனை

டூனிஸ், செப் 4

டூனிஷியாவில் இஸ்லாமிய மதத்தலைவர் ஒருவர் மீது மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இஸ்லாமிய மத தலைவரான முகமட் லாஸ்ராக் எல்ஹரி டூனிஷிய அரசை கவிழ்ப்பதற்கு சதி செய்தது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இத்தண்டனை வழங்கப்பட்டது என பாதுகாப்புஅமைச்சு செய்தி வெளியிட்டது.

முகமட் லாஸ்ராக் சதி முற்றத்துக்காக கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த போது தப்பி சவூதிஅரேபியாவிற்கு ஓடினார். ஆனால் சவூதி அரேபியா அவரை ஏற்க மறுத்து மீண்டும் டூனிஷியாவிற்கு திருப்பி அனுப்பியிருந்தது. (ஒ)

பிரேஸில் அமெரிக்கா ஒப்பந்தம்

வாஷிங்டன், செப் 4

போதைவஸ்து கடத்தல் முறியடிப்பு சம்பந்தமாக பிரேஸிலும் அமெரிக்காவும் புதிய ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கியுள்ளன

பிரேஸிலில் போதைவஸ்துகளுக்கு அடிமையானவர்களுக்கு இதன் மூலம் அமெரிக்கா புனர்வாழ்வு அளிக்கவுள்ளது. (ஒ)

..ஹராரேமாநாட்டில்..!

ஈரான், ஈராக் போர் முடிவுக்கு வரவேண்டும் என உறுதியான வேண்டுகோள் விடுத்த ஸாம்பியா ஜனாதிபதி டாக்டர் கெனத் கௌண்டா, அந்நாடுகளின் பொது எதிரியான தென் ஆபிரிக்காவை எதிர்த்துப் போரிட வேண்டும் என்றார்

*

ஆபிரிக்க முன்னரங்கு நாடுகளுக்கு அனைத்து உதவிகளும் அளிக்குமாறு ஆர்ஜென்டீனா ஜனாதிபதி ராஹல் அல்போன்ஸின் சர்வதேச சமுதாயத்தை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.

*

தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் இயக்கத்திற்கு தமது அங்கீகாரத்தை பெரு நாடு வழங்குகிறது

*

பிரிட்டோரியா ஆட்சிக்கு எதிராக கட்டாயத் தடைகளை விதிப்பதற்கு ஆதரவுதேடி மேலை நாடுகளுக்கு வெளியுறவு மந்திரிகளை ஒவ்வொரு நாடும் அனுப்பவேண்டும் என யோசனை கூறினார் அணிசேரா நாடுகள் இயக்கத்தின் புதிய தலைவரும் ஸிம்பாப்வே பிரதமருமான ரொபேர்ட் முகாபே.

நீதி சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய உலக பொருளாதார முறை வேண்டும் என்றார் அல்ஜீரிய ஜனாதிபதி சாட்லி பென்ஜடிக்.

*

எல்லைப் பகுதி நாடுகளைப் பயமுறுத்துவதற்காக தென் ஆபிரிக்கா இரசாயன ஆயுதங்களை உபயோகிப்பது தடுக்கப்பட வேண்டும் என்று தென் மேற்கு ஆபிரிக்க மக்கள் இயக்க தலைவர் சார்பில் மலேஷிய பிரதமர் தெரிவித்தார்

*

விடுதலை மற்றும் நீதிக்காக அமெரிக்க மக்களின் கருத்து திரட்டப்பட்டு வருவதாக மார்ட்டின் லூதர் கிங்கின் மனைவி கோரசாவின் கூறினர்.

*

குழுக் கூட்டத்தின் போது விவாதிக்கப்பட்ட அம்சங்கள்; முன்னரங்கு நாடுகளுக்கு உதவி, தென் ஆபிரிக்காவிற்கு எதிராக கட்டாய தடைகள், ஈரான் ஈராக் போர், மேற்காசிய பிரச்சினைக்கு தீர்வு, அணு ஆயுதக் குறைப்பு, சமரசம் என்பனவாகும். *

தென் ஆபிரிக்க பத்திரிகையாளர்களான பட்ரீசியா சிட்லியும், பிலிப் வன் நீய் கொக்கும் அணிசேரா மாநாட்டுச் செய்தியை சேகரிக்க தடை விதிக்கப்பட்டதுடன் ஸிம்பாப்வேயை விட்டு வெளியேறுமாறும் கோரப்பட்டுள்ளார்கள்.

*

சகல துப்பாக்கிகளும் இஸ்ரேலுக்கும் தென் ஆபிரிக்காவிற்கும் எதிராக திருப்பப்படவேண்டும் என்றார் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத்.

★

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் ஈரானிய ஜனாதிபதி அலிகொமெனியுடன் பல தடவைகள் பேச முற்பட்டபோது அலி கொமெனி தாது காதை இருகரங்களாலும் அடைத்துக் கொண்டார்.

இதற்குப் பதிலடியாக அலி கொமெனி பேசும் பொழுது தமது இயர் போனை கழற்றி எறிந்தார் அரபாத்

பாதிரிமாருக்கான நிதி தடுக்கப்பட்டது

வார்சோ, செப் 4

போலந்திலுள்ள [illegible] பாதிரிமார்களின் விவசாயப் பண்ணைகளுக்கு வழங்கப்படவிருந்த பெருந்தொகையான நிதி ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

போலந்திலுள்ள றோமன் கத்தோலிக்க திருச்சபை இதனைச் செய்துள்ளது.

மேற்கத்தைய நாடுகளிலிருந்து கிடைக்கவிருந்த இந்த பெருந்தொகையான நிதி உதவியை போலந்து அரசாங்கம் தனது கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க முடிவு செய்ததாலேயே திருச்சபை அதனை ரத்துச் செய்தது (ஒ)

100 பேர் கைது

இஸ்லாமாபாத், செப். 4

பாகிஸ்தானின் லாகூர் பகுதியில் நேற்று வன்செயல்கள் தலைதூக்கியதில் சுமார் 100 பேர் கைது செய்யப்பட்டனர்.

பாகிஸ்தானின் பல பகுதிகளில் கடந்த மூன்று வார காலமாக பொலிஸாருக்கும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களுக்குமிடையில் கலவரங்கள் நடைபெற்று வருவது தெரிந்ததே.

கைது செய்யப்பட்ட எதிர்க்கட்சியினரை விடுதலை செய்யுமாறு கோரி நடத்தப்பட்ட ஊர்வலத்தின்மீது நேற்று லாகூரில் தடியடிப்பிரயோகம் செய்த பொலிஸார் 100 பேரைக் கைது செய்தனர். (ஒ)

நல்லூர்த் தேரடிக்கு யாரால் மகிமைவந்தது?

நல்லையில் ஆத்மஜோதி உரை

யாழ்ப்பாணம், செப் 5

நல்லூர்த் தேரடிக்கு யாரால் மகிமை வந்தது?

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் நல்லை ஆதீனத்தில் பேசுகையில் இக்கேள்விக்குப் பதில் அளித்தார்.

அவர் சொன்னதாவது!

நல்லூர்த் தேரடிக்கு வந்த மகிமை முருகனால் மாத்திரம் வந்ததல்ல; யோகர் சுவாமிகளின் குருவாகிய செல்லப்பா சுவாமிகளால் வந்த மகிமை ஆகும்.

மாதம் ஒரு முறையோ இரு முறையோ நல்லூர்த் தேரடியில் அடியார்கள் கூடி மகேஸ்வர பூசை செய்து ஆனந்தமாகப் பாடி ஆடுகிறார்களென்றால் அதற்கு மூலகாரணர் செல்லப்பா சுவாமிகளேதான்

செல்லப்பா சுவாமிகளுடைய குருநாதனாகிய கடையிற்சுவாமிகள் செல்லப்பா சுவாமிகளை ஆட்கொண்ட இடம் நல்லூர்த் தேரடியே

செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிகளுக்கு உபதேசித்த 'ஒரு பொல்லாப்புமில்லை', 'எப்பவோ முடிந்த காரியம்', 'நாமறியோம்', 'முழுதும் உண்மை' என்ற நான்கு மகாவாக்கியங்களும் பிறந்தஇடம் நல்லூர்த் தேரடியே

நல்லூர்த் தேரடியில் இன்றும் ஆத்மீகஅலை வீசிக்கொண்டே இருக்கிறது செல்லப்பா சுவாமிகளுடைய சமாதிக் கோவிலும் நல்லூர்த் தேரடிக்குச் சமீபத்திலேதான் இருக்கிறது

ஒரு கமக்காரன் தன்னுடைய நிலத்திலே நல்ல வித்தையிட்டு அதிலுண்டாகும் களையைக் களைந்து இறுதியில் தானியத்தை ஒன்று சேர்க்கிறான்.

அதுபோலப் பக்தனும் சிவமாகிய நிலத்திலே பக்தியென்னும் வித்தை விதைத்துக் காமம் குரோத மோகமதமாச்சரியமென்னும் களையைக் களைந்து சிவபோகமென்னும் தானியத்தைச் சேர்த்துவைத்துப் புசிக்கின்றான்.

பூலோகமாகிய நந்தனவனத்திலே சிவர்களாகிய மலர்கள் மலர்ந்து இருக்கின்றன. சிவன் அதைக் கண்டு மகிழ்கின்றான்.

யோகர் சுவாமிகள் தனது குருநாதனாகிய செல்லப்பா சுவாமிகளைப்பற்றி எங்கள் குருநாதன் என்ற தனியங்கத்தில் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார்கள்.

அதில் தன்னை யாரென்று அறிவித்ததோடன்றி திருவடி தீட்சையும் பெற்றதாகக் கூறுகின்றார்.

அன்னை, பிதா, குரு ஆகிய மூன்றாகவுமே விளங்கியதோடமையாது உலகம் முழுவதிலுமே யோகர் சுவாமிகளுக்கு சீடர்கள் இருப்பதையும் அறிகிறோம்.

இராமகிருஷ்ண பரமஹம்சதேவருக்கு விவேகானந்தர் எப்படியோ, செல்லப்பா சுவாமிகளுக்கு யோகர் சுவாமிகள் வாய்த்தார்கள்.

இராமகிருஷ்ணருக்குப் பல சீடர்கள் வாய்த்தார்கள்.

ஆனால் செல்லப்பா சுவாமிக்கு ஒரே ஒரு சீடர் வாய்த்தார்

அவரோ உலகமெல்லாம் ஆளும் எண்ணம் தனது குருநாதனிடம் அருளைப் பெற்றார். 'நல்லூர்த் தேரடியில் நான் கண்ட சிவ யோகம் சொல்லமுடியாத சுகந்தினைக் காட்டிவிடும்' என்று யோகர் சுவாமிகள் பாடியதுபோல நாமும் பாடுவோமாக.

இப்படி ஆத்மஜோதி முத்தையா அவர்கள் தெரிவித்தார் (இ-எ)

சமய நிகழ்வுகளில்

சித்திவிநாயகர் கொடியேற்றம்

வேலணை, செப் 5

வேலணை இலந்தைவனம் அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான மகோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

15 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 16 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ஒ)

நீர்வேலி மீனாட்சிஅம்பாள் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப் 5

நீர்வேலி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும் (ஒ)

தேர் பவளக்கால் அமைப்பு விழா

வட்டுக்கோட்டை,செப் 5

மூளாய் ஸ்ரீ சித்தி விநாயகர், ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆகிய ஆலயங்களுக்கான புதியதேர் பவளக்கால் அமைப்பு விழா எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விநாயகர் சதுர்த்தி தின சுபவேளையில் நடைபெறும்.

அன்று பகல் 10 மணி அளவில் விசேஷ பூசைகளுடன் ஆரம்பமாகும் தேர் பவளக்கால் அமைப்பு விழாவைச் சிறந்த முறையில் நடத்த தேர்த் திருப்பணிச்சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ-161)

அன்னை மரியின் 2000 ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், செப் 5

அன்னை மரியின் பிறப்பின் இரண்டாயிரம் ஆண்டுப் பெருவிழா நாளை சனிக்கிழமை மாலை 4 30 மணிக்கு யாழ் அரியாலை கிழக்கு அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் செபமாலை தியானத்துடனும்விசேட பூஜை பலியுடனும் நடைபெறும் (ஒ)

கோப்பாயில் சைவசமய போட்டி

யாழ்ப்பாணம், செப் 5

இருபாலை சைவபரிபாலன சபையின் கொழும்புக்கிளை சமயக்குரவர் சமய அறிவுப் போட்டி ஒன்றை 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடத்தவுள்ளது.

கோப்பாய் தெற்கு இருபாலை கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் இப்போட்டிகள் நடைபெறும்.

மூன்று பிரிவாக நடைபெறவுள்ள இப்போட்டிகளுக்கு ஒவ்வொரு பிரிவிற்கும் 1000 ரூபா, 500 ரூபா. 800 ரூபா பெறுமதியான பரிசில்களும் [illegible] 100 ரூபா பெறுமதியான [illegible] பரிசில்களும் வழங்கப்படும். (ஒ)

திருவள்ளுவர் சனசமூக நிலைய ஆண்டு விழா

யாழ்ப்பாணம், செப் 5

யாழ் மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் 42 வது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று நிலைய மன்றத்தில் நடைபெறும்.

காலை நிகழ்ச்சிகளான இல்ல விளையாட்டுப் போட்டிகளுக்கு திரு. க. சி கிருஷ்ணன் தலைமை வகிப்பார்.

மாலை நிகழ்ச்சிகளுக்கு திரு அன்ரன் அல்பிரட் தலைமை வகிப்பார்

கலை நிகழ்ச்சிகள் பலவும், சிறப்புரைகளும் இடம் பெறும்

நீக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,செப் 5

மக்கள் விடுதலைப்படையின் பகுதி நேரமாகச் செயற்பட்ட நாவாந்துறையைச் சேர்ந்த ராஜா (ரவி) என்பவரை படையிலிருந்து நிரந்தரமாக நீக்குகிறோம்-

இப்படி ஈ பி. ஆர். எல் எப். அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது (இ)

நல்லூ ரழகா சரணம்! வடிவேலரசே சரணம் !!

அடியா குறவே சரணஞ் சரணம்
அகந்தை நீக்கும் அமலா சரணம்
படியின் மிசைநக் கீரன் புகலும்
பாடற் குருகும் பரனே சரணம்
அடியைத் தினமுந் தொழுவா ரணியும்
அணிசேர் நல்லூ ரழகா சரணம்
குடியைக் கெட்டோ தமிழர் குலமே
முருகா வருவா யருள்வாய் சரணம்.

மறையின் பொருளை யறியா வயனை
மறுகச் சிறைவாய் வைத்தவ சரணம்
பிறைசேர் பெருமான் குருவே சரணம்
பெய்வளை வள்ளி கணவா சரணம்
நிறைதரு மௌனவ பாடலி னிசை
நிரம்பக் கனிக ளுதிர்த்தவ சரணம்
சிறையார் கிளிகள் இசைசேர் நல்லூர்ச்
சேயே செம்மினஞ் சரணஞ் சரணம்

குறமா தணையுங் குமரா சரணம்
குஞ்சரி யாள்மகிழ் காந்தா சரணம்
திறல்சே ரரச சேனைகள் சிறிச்
சேர்த்தன வெம்மைக் காப்பாய் சரணம்
மறைகள் பரவும் [illegible] சரணம்
வடிவே லரசே தொழுதோஞ் சரணம்
இறைவா நெறியைத் தருவாய் சரணம்
எழிலார் நல்லூ ரழகா சரணம்.

— செ. மயில்வாகனம்

சம்மாந்துறையை யாழ்ப்பாணமாக்க

பிரதி அமைச்சர் முயற்சி!

அம்பாறை, செப் 5

கிழக்கு மாகாணத்தில் சம்மாந்துறைத் தொகுதியை கல்வி முன்னேற்றத்தைப் பொறுத்தமட்டில் "குட்டி யாழ்ப்பாணம்" ஆக மாற்றுவதே எனது இலட்சியம்

இப்படி சம்மாந்துறை எம். பியும் பிரதி அமைச்சருமான ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீதுசொன்னார்

சம்மாந்துறைத் தொகுதியில் இருந்து பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான மூன்று மாணவருக்கு ஹிஜ்ரா கிராம அபிவிருத்திச்சங்கம் ஊக்குவிப்பு பணமாக தலா 1,000 ரூபாவை வழங்கியுள்ளது.

அதை ஒட்டிய வைபவம் சம்மாந்துறை அமீர் அலி பொது நூலக மண்டபத்தில் நேற்று முன்தினம் நடந்தது. அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பிரதி அமைச்சர் ஜனாப் மஜீது பேசினார்.

யாழ்ப்பாணம் கல்வித்துறையில் முன்னேறியமைக்குக் காரணம், பெற்

(4ஆம் பக்கம் பார்க்க.

பொய்யாமொழி

குறள்:

பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது.

பொருள்:

பொருள் இல்லாதவர் ஒரு காலத்தில் வளம் பெற்று விளங்குவார்; அருள் இல்லாதவர் வாழ்க்கையின் பயன் அற்றவரே; அவர் ஒரு காலத்திலும் சிறந்து விளங்குதல் இல்லை.

பனம் பொருள் அபிவிருத்திச் சபையின்
அனுசரணையுடன்
யாழ் பீச் இன்ஸ் ஆதரவுடன்
ஜோ. எகட்டன்
7-9-1986 அன்று
யாழ் பீச் இன்சில் வழங்குகின்றார்
மறந்து விடாதீர்கள் 7-9-1986
பனம் பொருள் உணவுக்
கண்காட்சி
ஜோ. எகட்டன் வழங்கும் நிகழ்ச்சி

உதயன்

05-09-1986 வெள்ளிக்கிழமை

பனம் பொருள் அபிவிருத்திச் சபையின்
அனுசரணையுடன்
யாழ் பீச் இன்ஸ் ஆதரவுடன்
ஜோ. எகட்டன்
7-9-1986 அன்று
யாழ் பீச் இன்சில் வழங்குகின்றார்
மறந்து விடாதீர்கள் 7-9-1986
பனம் பொருள் உணவுக்
கண்காட்சி
ஜோ. எகட்டன் வழங்கும் நிகழ்ச்சி

திரியாய், கும்புறுபிட்டி, நிலாவெளியிலிருந்து

இடம்பெயர்ந்த அகதிகளை

திரும்பிச் செல்ல வற்புறுத்தாதீர்

திருமலை பிரசைகள் குழு அவசர வேண்டுகோள்

திருகோணமலை, செப். 5

அகதிகளாகி இடம் பெயர்ந்த, கும்புறுபிட்டி, நிலாவெளி, திரியாய்ப் பகுதித் தமிழரைத் திரும்பவும் அவர்களது இடங்களுக்குச் செல்லும்படி வற்புறுத்தாதீர்கள்.

அவர்களுக்குத் தொடர்ந்து, நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுங்கள்.

இப்படி புனர் வாழ்வு அமைச்சுக்கு அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

திருகோணமலைப் பிரசைகள் குழு, திருமலை அரச அதிபரின் சந்திப்பின் பின்னர் இந்த வேண்டுகோள் அடங்கிய மகஜர் ஒன்றை புனர் வாழ்வு அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளது.

கும்புறுபிட்டி, நிலாவெளி, திரியாய்ப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வந்த சுமார் 170 தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாக திருமலை நகரில் தங்கியுள்ளன.

வேறு இடங்களில் இருந்தும் வந்த தமிழ் அகதிகளும் திருமலை நகரில் அகதி முகாம்களில் தங்கியுள்ளனர்.

ஆனல் அரசு கும்புறுபிட்டி, திரியாய், நிலாவெளி அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதை மட்டுமே நிறுத்தியுள்ளது. அவர்களை, பழைய இடங்களுக்குச் சென்று குடியமரும்படி அரசு வற்புறுத்துகிறது.

ஏனைய அகதிகளுக்குத் தொடர்ந்து நிவாரணம் கிடைக்கிறது.

இதே போன்று நிலாவெளி, திரியாய் கும்புறுபிட்டி அகதிகளுக்கும் நிவாரணம் வழங்க ஆவன செய்யுங்கள்.

இப்படி திருமலைப் பிரசைகள் குழு புனர்வாழ்வு அமைச்சைக் கேட்டுள்ளது.

திருமலை அரசாங்க அதிபரும் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று கூறியதைத் தொடர்ந்தே அமைச்சருக்கு இம் மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (உ-எ-50)

பனம் பொருள் உணவு அறிமுக விழா

யாழ்ப்பாணம், செப் 5

பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் பனம் பொருள் உணவு வகைகளை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 7 ஆம் திகதியன்று நடைபெறும்.

அன்றைய தினம் காலை 10. 30 மணியளவில் யாழ். பீச் இன்னில் இந்த அறிமுக விழா ஆரம்பமாகும்.

அங்கு பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் தயாரிப்புகளும், பனம் பொருளினால் தயாரிக்கப்பட்ட உணவுப் பதார்த்தங்களும். மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்- பீச் இன் ஆதரவில் ஜோ. எகட்டன் வழங்கும் இந்த அறிமுக விழாவின் முடிவில் இசை நிகழ்ச்சியும் நடைபெறும். (உ)

தருமருக்கு நினைவஞ்சலி

சுன்னாகம், செப். 5

மானிப்பாய் முன்னாள் உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கத்தின் முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலி சிறப்பாக நடந்தேறியது.

தாவடியில் உள்ள அமரரின் நினைவு ஸ்தூபிக்கு மலரஞ்சலி செய்யப்பட்டது.

காரை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் விசேஷ பூசைகளும் நண்பகல் அன்னதானமும் வழங்கப்பட்டது. (இ-27)

வீடுகளை இழந்தவர்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப் 5

வவுனியா விமானத் தள விஸ்தரிப்பின் நிமித்தம் வீடுகளை இழந்து நிர்க்கதியாக இருப்பவர்கள் வவுனியா பிரசைகள் குழுத்தலைவர் திரு. என். எம். எக்ஸ் சொர்ணபாலாவை அவரின் இல்லத்தில் சந்திக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (உ-எ)

மன்னார் தொடர்புகள் 'அவுட்'

யாழ்ப்பாணம், செப் 5

மன்னார் மாவட்டத்துடனான தொலைத் தொடர்புகள் நேற்று முழுவதும் துண்டிக்கப்பட்டிருந்தன.

இலங்கையின் எப்பகுதியில் இருந்தும் மன்னாருடன் தொடர்பு கொள்ள முடியாத நிலை நேற்று இருந்தது. (உ-எ)

உணவுப் பொருள் விற்பனையில்

சுகாதாரத்தைப் பேணுவதற்கு முயற்சி

புலிகள் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப் 5

தமிழ்ப் பகுதிகளில் சீர்குலைந்து வரும் சுகாதார நிலைமைகளைக் கட்டுப்படுத்தி சுகாதார சேவைகளை பேணுவது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் நடவடிக்கை எடுக்கவிருக்கிறார்கள்.

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகளினால் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

இறைச்சி, மீன் விற்பனை நிலையங்கள். உணவு விடுதிகள், தேனீர்கடைகள், பேக்கரிகள் ஆகியவை சுகாதார கண்காணிப்பின் கீழ் அனுமதி பெற்று இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்குறிப்பிட்ட நிலையங்களின் உரிமையாளர்கள் அனைவரும் எம் மக்களுக்கு தரமானதும், உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்காத தரமான உணவுப் பொருட்கள் கிடைக்க எம்முடன் ஒத்துழைக்குமாறு அத் துண்டுப் பிரசுரத்தின் மூலம் புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்திருக்கிறது. (உ)

தடுப்பு உத்தரவு

மட்டக்களப்பு, செப் 5

மட்டக்களப்பு விமானப் படைத்தளம் விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கு வெளியார் வாகனங்கள் உதவுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இத்தடை உத்தரவை இரு தீவிரவாத அமைப்புகள் மேற்படி வாகன உரிமையாளர்களுக்குப் பிறப்பித்துள்ளன.

விமானத்தளத்தில் தற்போது பல்வேறு விஸ்தரிப்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

கல், மண் ஏற்றுதல், நிலம் பண்படுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்குத் தனியார் உழவு இயந்திரங்கள் லொறிகள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

இதனைத் தடுப்பதற்காகவே மேற்படி அமைப்புகள் உரிமையாளர்களைச் சந்தித்து இவ் உத்தரவை பிறப்பித்ததாகக் கூறப்படுகின்றது. (உ-21)

காணமற் போனோர் விவரங்கள் சேகரிப்பு

"மோர்ஜ்" தகவல் திரட்டுகிறது

யாழ்ப்பாணம், செப் 5

மோர்ஜ் என்ற மனித உரிமை ஸ்தாபனம் அண்மைக் காலத்தில் காணமற் போனவர்களின் விவரங்களைத் திரட்டி வருகிறது.

விவரங்கள் கிடைத்தவுடன் தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும். தேடுதலில் குறிப்பிட்ட நபர் அகப்படாவிடின் உறவினர்களுக்கு நிவாரணம் கிடைக்க இவ்விவரங்கள் எதிர்காலத்தில் உதவும்.

சம்பந்தப்பட்டவர்கள் காணமற் போனவர்களின் முழு விவரங்களை ஆங்கிலத்தில் சத்தியக் கடதாசி மூலம் உறுதிப்படுத்தி திரு. என் எம். எக்ஸ். சொர்ணபால, சட்ட இணைப்பு உத்தியோகத்தர், மோர்ஜ், 6 ஆலோப் அவெனியூ, கொழும்பு - 3 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உயிரிழந்தவர்கள், கைதாகி காவலில் இருப்பவர்களின் விவரங்களை அனுப்பவேண்டாம் என்றும் கேட்கப்பட்டிருக்கிறது. (உ-எ)

காரைநகரில் கம்பன் விழா

யாழ்ப்பாணம், செப் 5

காரைநகர் கம்பன் கழகத்தின் அங்குரார்ப்பணமும் முதலாவது கம்பன் விழாவும் நாளையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும்.

நாளை காலை 9 மணிக்கு காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் அகில இலங்கை கம்பன் கழகத் தலைவர் திரு. இ நந்தகுமார் தலைமையில் நடைபெறும் அங்குரார்ப்பண விழாவில் கழகத்தின் செயற் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

மாலை 4 30 மணிக்கு ஆரம்பமாகும் முதலாம் நாள் விழாவை மங்கல இசையுடன் பிரம்மஸ்ரீ என் ஞானசம்பந்தக் குருக்கள், திரு. க.சோமசேகரம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பர்.

திரு. ஏ. சிவராமலிங்கம் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

'சிறியன சிந்தியாதான்' என்ற தலைப்பில் வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன் உரை நிகழ்த்துவார்.

'சகோதர பாசத்தில் விஞ்சி நிற்கும் பாத்திரம் இலக்குவனா? பரதனா? கும்பகர்ணனா?'' என்ற தலைப்பில் நடைபெறும் பட்டி மண்டபத்திற்கு திரு இ. ஜெயராஜ் நடுவராக இருப்பார். (உ)

சட்டத்தை மீறி தென் ஆபிரிக்காவில் மரண ஊர்வலம்

கேப்டவுன், செப் 4

தென் ஆபிரிக்காவின் வன்செயல்களில் பாதிக்கப்பட்டு கடந்தவாரம் பலியான 20 பேர்களின் இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறும்.

ஊர்வலங்கள் நடத்தக் கூடாது என்ற தென் ஆபிரிக்காவின் அரச சட்டத்தை மீறி இதில் பல்லாயிரக்கணக்கானோர் பங்குபற்றவுள்ளார்கள்.

பலியான சகலரும் பாதுகாப்பு படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியிருந்தார்கள்.

மரணச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக பல ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் அநேகர் சுவெட்டோவிற்கு வந்துள்ளதால் அங்கு நேற்று முழுக்க பதற்றம் நிலவியது.

இதனால் தென் ஆபிரிக்க அரசு மீண்டும் செய்தித் தடையை அமுல் படுத்தியுள்ளது. (ஓ)

வேலை பெற்றுத் தருவதாகக் கூறி பணம் மோசடியாம்

போராளிகள் முகாம் ஒன்றில் நபர் தடுத்து வைப்பு

பண்டத்தரிப்பு, செப் 5

மத்திய கிழக்கில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி பணமோசடி செய்தார் என்று கூறப்படும் நபர் ஒருவர் போராளிகள் முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி இருபது வேலையற்ற இளைஞர்களிடம் நான்கு லட்சம் ரூபாவை வாங்கிக் கொண்டு 1984 அக்டோபர் மாத இறுதியில் பிரஸ்தாப நபர் கொழும்பு சென்றாராம்.

மீண்டும் கடந்த திங்கட்கிழமை அவர் யாழ்ப்பாணம் வந்தார்.

புதன்கிழமை பண்டத்தரிப்பு சந்தியில் பஸ்தரிப்பில் நின்றபோது இவரிடம் பணம் கொடுத்த இளைஞர் கோஷ்டி ஒன்று வந்து இவரைச் சூழ்ந்து கொண்டது.

இதுபற்றி போராளிகளுக்கும் அறிவிக்கப்பட்டது.

ஆளை அழைத்துச் சென்று தடுத்து வைத்து போராளிகள் விசாரணை நடத்தினர்.

மிருசுவிலிலுள்ள நண்பரின் திருமணத்திற்குச் சென்றுவிட்டு உறவினர்களை, பண்டத்தரிப்பு சில்லாலைப் பகுதியில் சந்திக்க வந்து திரும்புகையிலேயே இவர் இளைஞர்களிடம் சிக்கினர் என்று விசாரணையின் போது தெரியவந்தது.

இவருடன் கொழும்பில் இருந்து வந்த மூவரில் இளைஞர் ஒருவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (இ-120)

நன்றி நவிலல்

யாழ். கோட்டை இராணுவமுகாமிலிருந்து கடந்தமாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஏவப்பட்ட ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி அகால மரணமடைந்த எங்கள் குடும்ப விளக்கும் ஹட்டன் நாஷனல் வங்கி முகாமையாளருமான

திரு. ச. சூரியகுமாரனின்

அகால மரணச்செய்தி கேட்டு ஓடோடிவந்து எங்கள் துயரத்தில் பங்குகொண்டும், மலர் வளையம் சாத்தியும், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும் அனுதாபச் செய்தி அனுப்பியும் மரணச்சடங்கில் கலந்துகொண்ட அனைத்து வங்கி உயரதிகாரிகள், ஊழியர்கள், தொழிலதிபர்கள், வர்த்தகப் பெருமக்கள், யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்கள், பத்திரிகை நிறுவனங்கள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது மனம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

திருமதி ச பிரசாதம்மா
கோண்டாவில் மேற்கு, (தாய்)
கோண்டாவில். திரு ச.ஸ்ரீஸ்கந்தராஜசர்மா
(சகோதரன்)

ஈழத்தின் தமிழ் இதயங்களுக்கு
ஓர் இனிமையான செய்தி!

ரெலிபோன் ரெலெக்ஸ்
சேவைகள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அவசியங்களில் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்.

மைக்ரோ
கொம்யூனிக்கேசன்
ஸ்தாபனத்தார்

ரெலிபோன் ரெலெக்ஸ் சேவையில் பல வருடகால அனுபவம் பெற்றவர்களின் தொழில் நுட்பக் கண்காணிப்பின் கீழ் தங்கள் உன்னத சேவையை இரவு பகல் 24 மணி நேரமும் வழங்குகின்றார்கள்

உங்கள் தேவையே எங்கள் சேவை!

மைக்ரோ
கொம்யூனிக்கேசன்
கே. கே. எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி.
கொக்குவில்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 05-09-1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Numder QJ 60 N86

கிழக்கில் விமா....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலை 8 30 மணியளவில் கொழும்பில் இருந்து வந்த விமானங்களில் ஒன்று 15 நிமிடங்கள் கழிந்த மீண்டும் கொழும்பு செல்லத் தயாராகியது.

விமானம் மேல் எழும்பி சில நிமிடங்களில் சென்று இருக்கும் போராளிகள் ரொக்கட் லோஞ்சர்கள் கொண்டு விமானம் மீது தாக்கினர்.

விமானத்தின் சிறகு ஒன்று இத்தாக்குதலில் சேதமடைந்தது.

சீனன் வாடியில் தரையிறங்கியது

விமானம் தரையிறங்காமல், வானிமார்க்கமாக கடல் பகுதிக்குச் சென்று திருகோணமலை, சீனன்வாடி விமான நிலையத்தில் தரை இறங்கியது.

இதன் பின்னர் ஹெலிக்கொப்டர் அத்தப்பகுதியைச் சுற்றி ஒரு மணி நேரமாக வட்டமிட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

விமான நிலைய முகாமில் இருந்து ஷெல் தாக்குதலும் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.

இரண்டாவது தாக்குதல்

விமானத்தின் மீதான இரண்டாவது தாக்குதல் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது.

கொழும்பில் இருந்து வந்த இரண்டாவது விமானம் தரை இறங்க முயற்சித்தபோது இரண்டாவது தாக்குதலைப் போராளிகள் மேற்கொண்டனர்.

நான்கு முறை விமானம் தரை இறங்க முயற்சித்தது. நான்கு முறையும் தரை இறங்கவிடாதபடி போராளிகள் தாக்குதலை நடத்தினர்.

இதைத் தொடர்ந்து அந்த விமானம் தரை இறங்காமலே கொழும்பு திரும்பியது.

இதன் பின்னர் ஹெலிக்கொப்டர் ஒன்று அப்பகுதியில் பலத்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

இச்சம்பவங்களில் குடிமக்களுக்கு உயிரிழப்பு, [illegible] என்பது பற்றிய விவரங்கள் வெளியாகவில்லை. (அ-எ-21)

யாழ்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு இன்றைய நிலைமையை விளக்க வேண்டும்.

கல்லூரிகளை தொடர்ந்து இயக்குவதற்கு பிள்ளைகளை ஒழுங்காக கல்லூரிகளுக்கு அனுப்பவேண்டும் எனக் கோரவேண்டும்.

* பாடசாலைகளைப் பாதிக்கத்தக்கவாறு கோட்டை இராணுவ முகாமில் இருந்து கல்லூரியை நோக்கி தாக்குதல் நடத்தப்படுவது நிறுத்தப்படவேண்டும். இது தொடர்பாக யாழ் கல்விப்பணிப்பாளர் மூலம் இராணுவ இணைப்பதிகாரியை கோரவேண்டும். (இ-10)

சம்மாந்துறை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூர்களின் விடாமுயற்சியே. நானும் யாழ்ப்பாணத்தில் கல்வி கற்றேன்.

எமது பெற்றோர்களும் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டவேண்டும்.

இப்படி பிரதி அமைச்சர் மேலும் சொன்னார்.

பல்கலைக் கழகத்துக்கு தெரிவான மூன்று [illegible] வர்களில் ஒருவர் தமிழர் இருவர் முஸ்லிம் [illegible] (உ-எ-14)

38 பவுண் தங்க நகை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எவரும் தங்க நகைகள் அணியக் கூடாது என மாந்திரீகரால் கூறப்பட்டது.

நகைகள் இரும்புப் பெட்டி ஒன்றில் வைத்துப் பூட்டப்பட்டன.

பின்பு அந்தப் பெட்டி பூசைப் பொருள்களுக்கு மத்தியில் வைக்கப்பட்டு தினமும் பூசைகள் நடந்தன.

திடீரென மாந்திரீகர் வெளியூர் சென்று பல நாட்களாகியும் திரும்பி வரவில்லை.

சந்தேகம் கொண்ட வீட்டுக்காரர் மற்றவர்களின் உதவியுடன் பெட்டியைத் திறந்துபார்த்த போது தங்க நகைகள் இருந்த பெட்டியினுள் இரும்புத்துண்டுகள் கிடந்தன.

பெரியவிளான் இணக்கசபையினர் போராளிகளின் உதவியுடன் நடத்திய விசாரணையிலேயே மேற்கண்ட விவரங்கள் அம்பலமாகின.

மோசடி உண்மை வெளியானதை அறிந்து மோசடிக்கு உடந்தையாக இருந்தார் என்று கூறப்படும் வீட்டுக்காரரின் மருமகனின் சீதனக் காணிகள் மீண்டும் மாமனார் பெயருக்கு எழுதப்பட வேண்டும் என்றும் அவரின் முதுசக் காணி ஒன்று வீட்டுக்கு நன்கொடையாக எழுதப்பட வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இத்தீர்ப்பை வழங்கும் போது சில்லாலை பங்குத்தந்தை இருதயதாஸ் அடிகளும் பெரியவிளான் பங்குத்தந்தை ஜெயக்குமார் அடிகளும் சமூகமாக இருந்தனர். (இ-120)

தசாக அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் அக்ஷய வருடம் ஆவணி மாதம் (24-8-1986) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்திய எனது அன்புத் தம்பி

திரு. ச. சூரியகுமாரன்
அவர்களின்
(முகாமையாளர்,ஹட்டன் நாஷனல் வங்கி,யாழ்ப்பாணம்)

தசாகக் கிரியைகள் (2-9-1986) தொடக்கம் நடைபெறும். (6-9-1986) சனிக்கிழமை பகல் 11-00 மணியளவில் அன்னாரது கிரியைகளின் இறுதி நிகழ்ச்சியும் சமாராதனையும் (மாகேஸ்வர பூசை) நடைபெறும் அத்தருணம் யாவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பிதழ் கிடைக்காதவர்களும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

ச. ஸ்ரீஸ்கந்தராஜ சர்மா
(தமையன்)
கோண்டாவில் மேற்கு, ச. பிரசாதம்மா
கோண்டாவில். (தாய்)

யாழ்ப்பாணம் பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

கைத்தறி நெசவாளர் தேவை

கண்டி வீதி அரியாலையில் அமைந்துள்ள எமது கைத்தறி நிலையத்திற்கு நெசவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியுடையோர் விண்ணப்பிக்கவும் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் துண்டு அடிப்படையில் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு, சங்கத் தலைமைக்காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும். யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

அலுவலக நேரம் 8. 00 மணி தொடக்கம் 5 00 மணி வரை சனிக்கிழமை அலுவலக நேரம் 8. 00 மணி தொடக்கம் 1. 00 மணி வரை.

விண்ணப்ப முடிவுத் திகதி — 08. 09. 1986

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

பொதுமுகாமையாளர்,
யாழ் ப. நோ. கூ. சங்கம்,
259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

04 09 86 பொதுமுகாமையாளர்